www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Kanchipuram District

# முதல் இடைப்பருவத்தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் : 1 2 4 3 3

## பொதுத்தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

**I. பலவுள் தெரிக. 8 x 1 = 8**

1. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ் !" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்

அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர் மோனை, சீர் எதுகை
இ) அடி எதுகை, சீர் மோனை ஈ) சீர் எதுகை, அடி மோனை

2. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் _______.

அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

3. பொருத்துக :

அ) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) பசுக்கள் - 2) மரங்களிலிருந்து விழுந்தன
இ) பறவைகள் - 3) குளிரால் நடுங்கின
ஈ) விலங்குகள் - 4) மேய்ச்சலை மறந்தன

அ) 1,3,4,2 ஆ) 3,1,4,2 இ) 3,1,2,4 ஈ) 2,1,3,4

4. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

5. "மழைக்குப் பிறகும் மழை" - என்ற கவிதை நூலை வெளியிட்டவர்

அ) தி.சு.நடராசன் ஆ) உத்தமசோழன் இ) அய்யப்ப மாதவன் ஈ) பாரதிதாசன்

6. "உவா உற வந்து கூடும்
உடுபதி இரவி ஒத்தார்" ! யார் யார்?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

7. 'வெங்கதிர்' - இலக்கணக்குறிப்புத் தருக.

அ) பெயரெச்சம் ஆ) தொழிற் பெயர் இ) உரிச்சொல் ஈ) பண்புத்தொகை

8. 'பாரதி வாழ்த்து' - என்ற கவிதை நூலை எழுதியவர்

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) பரலி. சு. நெல்லையப்பர் ஈ) கவிகேசரி சாமி தீட்சிதர்

**II. எவையேனும் நான்கனுக்கு விடையளி. 4 x 2 = 8**

9. ஒலிப்பின்னல் என்றால் என்ன?

10. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.

11. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களை கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான் - இரு தொடர்களாக்குக.

12. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



13. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு வரைக.

14. மறக்கக்கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?

III. எவையேனும் மூன்றனுக்கு விடையளி. 3x4=12

15. செம்பரிதி மலைமேட்டில் தலைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம் - தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

16. எங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

17. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

18. சடாயுவைத் தந்தையாக ஏற்று இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

19. பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

IV. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

20. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

அ) தாமரை இலை நீர் போல ஆ) எலியும் பூனையும் போல

21. விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.

22. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) கலை, களை, கழை

23. ஏதேனும் ஒன்றுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) பொலிந்தான் (அல்லது) ஆ) வியந்து

24. ஏதேனும் ஒன்றுக்கு புணர்ச்சி விதி தருக.

அ) தனியாழி (அல்லது) ஆ) அருங்கானம்

V. பெருவினா (அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக) 2x5=10

25. அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

*(அல்லது)*

ஆ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

26. அ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ........... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

*(அல்லது)*

ஆ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப் பற்று ஆகியவற்றை விவரிக்க.

VI. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6

27. அ) 'வையகம் பனிப்ப' ....... எனத் தொடங்கும் நெடுநல்வாடை பாடலை எழுதுக.

ஆ) 'படும்' என முடியும் குறள்.

*******

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com